# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ சமயம் I<br>Christianity I | Three Hours<br>Gr -13 (2021) | 43 T I |

**சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. யூதர்கள் இணைத்திருமறை நூல்களைப் பயன்படுத்துவதை தவிர்த்துவிட்டனர் எனக் குற்றம் சாட்டியவர்.
    (1) புனித ஜஸ்ரின் (2) புனித ஒரிஜின் (3) புனித அகுஸ்தின்
    (4) புனித கிளமன்ட் (5) புனித சிறில்

02. பாலஸ்தீனா நாட்டின் முதுகெலும்பாக அமைந்த பிரதேசம்.
    (1) கடற்கரை சமவெளி (2) யோர்தான் பள்ளத்தாக்கு (3) கலிலேய மலைப்பிரதேசம்
    (4) யூதா மலைப்பிரதேசம் (5) மேற்கு மலைத்தொடர்

03. இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் வாழ்ந்த காலம்.
    (1) 450 வருடங்கள் (2) 420 வருடங்கள் (3) 400 வருடங்கள்
    (4) 430 வருடங்கள் (5) 440 வருடங்கள்

04. தாவீதின் பரம்பரையின் கடைசி அரசன்.
    (1) யோசியா (2) யோயாக்கிம் (3) எரோபவாம்
    (4) செதேக்கியா (5) சாலமோன்

05. எருசலேம் அரசியல் ரீதியாகவும், சமயரீதியாகவும் முக்கியத்துவம் பெறக் காரணமாய் அமைந்த விடயம்.
    (1) அரசாட்சியின் உரிமை (2) உடன்படிக்கைப் பேழை கொண்டு வந்தமை
    (3) நகரமயமாக்கல் (4) தாவீது யூதாவின் அரசனானார்
    (5) சாலமோனின் ஆட்சி

06. அறிவுரையாக அமைந்திருப்பதை விசேட பண்பாகக் கொண்ட மரபு.
    (1) D மரபு (2) J மரபு (3) E மரபு
    (4) P மரபு (5) Q மரபு

07. மனிதனின் அழிவுக்குக் காரணம் அகங்காரம் என்பதை எடுத்துக்காட்ட விவிலிய எழுத்தாளர் முன்வைக்கும் கதை.
    (1) ஆதாம் ஏவாள் (2) பாபேல் கோபுரம் (3) நோவா
    (4) காயீன் ஆபேல் (5) லாமேக்ரா

08. இறைவனின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன் என யாக்கோபு கூறிய இடம்
    (1) எபிரோன் (2) லூசு (3) பெனியேல்
    (4) காரான் (5) கானான்

09. பத்துப் பெரும் துன்பங்களின் நோக்கமாக அமைவது.
    1) எகிப்தியரை அழிப்பது
    2) இஸ்ராயேலருக்கு நம்பிக்கையைக் கொடுப்பது
    3) எகிப்தியத் தெய்வம் பொய் என்பதை நிரூபிப்பது
    4) பார்வோனின் தலைக்கனத்தைச் சாடுவது
    5) இறைவனின் அதிகாரத்தை பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் வெளிப்படுத்துவது.

10. ''சொத்து'' என்பதன் எபிரேயச் சொல் ஆனது
(1) பறின் (2) கொஹேன் (3) மம்ளேகெற்
(4) செகுல்லா (4) கொக்கடேஸ்

11. கன்னி கருவுற்று ஓர் ஆண் மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார் எனக்கூறி இறைவாக்குரைத்த இறைவாக்கினர்.
(1) ஆமோஸ் (2) ஒசேயா (3) எரேமியா
(4) எசாயா (5) எசேக்கியேல்

12. திருமண உறவை இறைவனுக்கும் இறைமக்களுக்கும் இடையிலுள்ள உறவாக முன்வைக்கும் இறைவாக்கினர்.
(1) எசாயா (2) ஆமோஸ் (3) எரேமியா
(4) எசேக்கியேல் (5) ஒசேயா

13. ''அப்போகளிப்ஸ்'' எனும் கிரேக்கச் சொல்லின் பொருள்
(1) மறைதல் (2) இறை ஏவுதல் (3) வெளிப்பாடு
(4) கண்ணுக்குப் புலனாகுதல் (5) மறைபொருள்

14. பழைய ஏற்பாட்டில் ஞான இலக்கியத்திற்கு உட்பட்ட ஏழு நூல்களில் இரண்டு ஆவன,
(1) திருப்பாடல், ரூத் (2) யோபு, எஸ்தர் (3) யோபு, ரூத்
(4) நீதிமொழிகள், நெகேமியா (5) சபை உரையாளர், சாலமோன் ஞானம்

15. திருப்பாடல் தொடர்பாக ஆழமான ஆய்வொன்றை முதன் முதலாகச் செய்த விவிலிய வல்லுநர்.
(1) தூய ஜஸ்டின் (2) தூய ஜெரோம் (3) தூய அத்தனாசியார்
(4) ஹேமன் குண்கன் (5) தோமஸ் அக்குவைனாஸ்

16. சினகொக் என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்.
(1) ஆலயம் (2) பலி செலுத்துபவர் (3) ஒன்றுகூடல்
(4) பிரிந்திருப்பவர் (5) அந்நியர்

17. இயேசுவின் காலத்தில் அரசியல் குழுவாகச் செயற்பட்டவர்கள்.
(1) பரிசேயர் (2) ஏரோதியர் (3) எசேனியர்
(4) சதுசேயர் (5) செலஸ்தியர்

18. இயேசுவின் காலத்தில் யூதசமூகத்தில் உயர்வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்கள்.
(1) சதுசேயர், பரிசேயர் (2) எசேனியர், செலோத்தியர் (3) எசேனியர், பரிசேயர்
(4) பரிசேயர், எசேனியர் (5) பரிசேயர், செலோத்தியர்

19. தொழுகைக் கூடங்களில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்
(1) கற்பித்தல், செபித்தல், வழிபாடுகள் (2) கற்பித்தல், வழிபாடுகள், தியானித்தல்
(3) கற்பித்தல், செபித்தல், தியானித்தல் (4) கற்பித்தல், செபித்தல், பலியிடல்
(5) கற்பித்தல், வழிபாடு, செபித்தல்

20. தலைவன் பணியாளனாக மாறவேண்டும் எனும் இயேசுவின் போதனை செயல் வடிவம் பெற்ற நிகழ்வு.
(1) திருமுழுக்கு (2) இறுதி இராவுணவு (3) சிலுவைப்பலி
(4) கெத்சமனி வேண்டல் (5) எருசலேம் பவனி

21. இயேசுவின் சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்த வாக்கியம்.
(1) இவன் யூதரின் அரசன் (2) இவர் மெசியா (3) விடுதலை வீரன்
(4) உரோமையக் கிளர்ச்சியாளர் (5) கடவுளின் மகன்

22. உரோமைக் குடியுரிமையைப் புனித பவுல் பெற்றுக்கொண்டது.
(1) கடின உழைப்பால் (2) சிறந்த கல்வியால் (3) தந்தையின் வழியில்
(4) தாயின் வழியில் (5) பணத்தைக் கொடுத்து

23. புனித பவுலின் முதலாவது தூதுரைப் பயணத்தின் போது பாப்போவில் மனந்திரும்பிய ஆட்சியாளர் யார்?
(1) மந்திரவாதி சீமோன் (2) பிலமோன் (3) செர்க்கியு பவுல்
(4) ஓனேசிம் (5) தெமேத்திரியு

24. புனித பவுல் உரோமையருக்கு திருமுகத்தை எழுதியது.
(1) எபேசிலிருந்து (2) தெசலோனிக்காவிலிருந்து (3) பிலிப்பியிலிருந்து
(4) கொரிந்திலிருந்து (5) கலாத்தியாவிலிருந்து

25. புனித பவுல் திருமண வாழ்வு பற்றிக் கூறும் திருமுகம்.
(1) உரோமையர் (2) பிலிப்பியர் (3) தெசலோனிக்கர்
(4) எபேசியர் (5) பிலமோன்

26. இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றது.
(1) காலத்தின் நிகழ்வுகளுக்கு ஏற்றதாகும் படியாகும்
(2) யூத கலாசாரத்திற்கு மதிப்பளிப்பதற்காகும்
(3) இறைமகன் தன்மையை வெளிப்படுத்துவதற்காகும்
(4) இறை விருப்பம் நிறைவேற்றுவதற்காகும்
(5) பாவத்திற்கு மன்னிப்புப் பெறுவதற்காகும்

27. திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின் அரசபணிக்கு அழைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவனிடத்தில் இருக்க வேண்டிய பண்பாவது,
(1) சிறந்த வாழ்க்கை வாழுதல்
(2) தனது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றுதல்
(3) மற்றவர்கள் மதிக்கும் வகையில் வாழுதல்
(4) தனது எதிர்கால நலன் கருதி வாழுதல்
(5) பணிவிடை பெறுவதற்கன்றி பணிவிடை புரிதல்

28. ‘மென்று உண்ணுதல்’ என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல்.
(1) சார்க்ஸ் (2) காயிரோஸ் (3) அகபே
(4) மத்தாரெஸ் (5) த்ரோகயின்

29. இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியது தொடர்பாக புதிய ஏற்பாட்டிலுள்ள மிகப் பழைமையான அறிக்கை.
(1) கொரிந்தியருக்கு எழுதிய திருமுகம் (2) லூக்கா நற்செய்தி
(3) மத்தேயு நற்செய்தி (4) மாற்கு நற்செய்தி
(5) யோவான் நற்செய்தி

30. திருச்சபையின் ஆரம்பகாலம் எனப்படுவது,
(1) முதலாம் நூற்றாண்டு (2) 1-2 நூற்றாண்டு (3) 1-3 நூற்றாண்டு
(4) 1-5 நூற்றாண்டு (5) 1-15 நூற்றாண்டு

31. மறையைப் போதிப்பதிலும், திருமுழுக்குக் கொடுப்பதிலும் ஈடுபட்ட திருத்தொண்டர்கள்.
(1) பிலிப்பு, தீமோன் (2) பர்மனா, பிரக்கோர்
(3) ஸ்தேவான், பிரக்கோ (4) தீமோன், பிலிப்பு
(5) பிலிப்பு, ஸ்தேவான்

32. தன்னைக் கடவுள் என வணங்கும்படி கட்டளையிட்டு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய பேரரசன்.
(1) பேரரசன் நீரோ (2) பேரரசன் திராஜன்
(3) பேரரசன் மாற்குஸ் அவுஸ்ரேலியன் (4) பேரரசன் தொமிசியன்
(5) பேரரசன் வலேரியன்

33. கி. பி 313இல் மிலான் சாசனத்தின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு சுதந்திரமான காலம் உதயமானது. இதற்கு காரணமாகக் கருதப்பட்டவர்.
(1) பேரரசன் தியோக்கிளிசியன் (2) பேரரசன் கொன்ஸ்தாந்தின்
(3) பேரரசன் அலெக்சாண்டர் (4) பேரரசன் யூலியஸ் சீசர்
(5) பேரரசன் சைரஸ்

34. திரிபோவுடன் உரையாடல் எனும் நூலை எழுதியவர்.
(1) புனித ஆத்தனாசியார் (2) புனித ஜெரோம் (3) பெரிய கிரகோரியார்
(4) புனித ஜஸ்டின் (5) புனித சிறில்

35. நெஸ்தோரிய பேதகத்திற்கு எதிராகக் குரலெழுப்பியவர்
(1) புனித ஜெரோம் (2) புனித அத்தனாசியார் (3) தெர்த்தூலியன்
(4) புனித சிறில் (5) புனித ஜஸ்டின்

36. கி. பி 496இல் கிறிஸ்தவ மறையை ஏற்றுக்கொண்ட கிளோவிஸ் எக்கோத்திரத்தின் தலைவராவார்?
(1) பர்குண்டியன் (2) ஒஸ்திராகோத் (3) பிராங்
(4) வண்டல் (5) ஹுண்

37. கி. பி 910இல் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபை.
(1) கார்தூசியன் துறவற சபை (2) கமல்டோலெஸ் துறவற சபை
(3) அகுஸ்தீனார் துறவற சபை (4) குளுனி துறவற சபை
(5) கார்மேல் துறவற சபை

38. இறையியல் என்பது விளக்கத்தினைத் தேடிச்செல்லும் விசுவாசமாகும் எனக் கூறியவர்.
(1) புனித அன்சலம் (2) புனித அகுஸ்தீனார்
(3) புனித ஜஸ்ரின் (4) பீற்றர் லெம்பட்
(5) புனித தோமஸ் அக்குவைனாஸ்

39. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் கார்மேல் மலையில் ஆரம்பமான துறவற வாழ்வு முறையை இங்கிலாந்தில் அறிமுகம் செய்தவர்.
(1) புனித அவிலா திரேசா (2) புனித சிலுவை அருளப்பர்
(3) புனித சைமன் ஸ்டொக் (4) புனித பிரான்ஸ்
(5) மத்தேயு டீ பஸ்ஸி

40. திருதெந்தின் பொதுச்சங்கத்தைக் கூட்டிய திருத்தந்தை
(1) 7ஆம் பயஸ் (2) 23ஆம் யோவான் (3) 10ஆம் பத்திநாதர்
(4) மூன்றாம் பவுல் (5) 4ஆம் கிரகோரி

41. கி. பி 1912இல் அநுராதபுரத்தில் நடைபெற்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின்போது கட்டிட சிதைவுகளுள் கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிலுவையைக் கண்டெடுத்தவர்.
(1) செனரத் பரணவிதான (2) கொஸ்மஸ் இன்டிகொப்லேசுஸ்டஸ்
(3) E.R. அயர்ட்டன் (4) பென்சமின் றபாய்
(5) அபுசயிட்

42. போர்த்துக்கேயரின் "இரக்கச் சங்கம்" மூலம் இடம்பெற்ற பணிகளிலிருந்து உமது வாழ்க்கைக்கு கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினையாவது,
(1) பாராபட்சம் பாராது அனைவரையும் சமமாக மதித்தல்
(2) மறையைப் பரப்ப இயலுமான அளவில் உதவி செய்தல்
(3) கிறிஸ்தவ இலக்கியம் ஒன்றை உருவாக்க ஒத்துழைத்தல்
(4) ஏழைகளுக்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் உதவுவதற்கு பங்களிப்பை வழங்குதல்
(5) பாடசாலை அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்தல்

43. பிலிப் பல்தேயுஸ் அடிகளார் மூலம் நிறைவேற்றப்பட்ட சிறப்பு வாய்ந்த பணி,
(1) பங்குப்பாடசாலைகள் வழியாக மறைபணியை முன்னெடுத்தல்
(2) திருவழிபாட்டிற்குத் தேவையான பாடல்களை எழுதினார்
(3) மருத்துவப்பணியில் ஈடுபடுதல்
(4) தோட்டப்பகுதிகளில் மறைப்போதகப் பணியை முன்னெடுத்தல்
(5) மறை ஆசிரியர்களை (கற்றகிஸ்ட்) பயிற்றுவித்தல்

44. கத்தோலிக்கத் திருச்சபையின் வளர்ச்சிக்காக முதன் முதலாக இலங்கைக்கு வருகை தந்த பெண்களின் துறவறசபை,
(1) சதா சகாய மாதா சகோதரிகள் (2) திருக்குடும்ப சகோதரிகள்
(3) கார்மேல் சகோதரிகள் (4) பிரான்சிஸ்கன் சகோதரிகள்
(5) இறைபராமரிப்பின் சகோதரிகள்

45. இலங்கையில் உதவிபெறும் பாடசாலையை ஆரம்பித்தவர்,
(1) அதிவண அன்று மெலிசன் (2) அருட்திரு ஸ்ரீவன் செமேரியா
(3) அருட்திரு மூச்செல் (4) அருட்தந்தை கிறிஸ்தோபர் பொன்ஜின்
(5) ஆயர் ஹிலேரியன் சிலானி

46. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஆலோசனையின்படி இலங்கையில் ஏற்பட்ட புதிய திருப்பம்,
(1) பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டது
(2) துறவற சகோதரிகள் வைத்தியசாலைப்பணியில் ஈடுபட்டது.
(3) சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் பங்கேற்றல்
(4) தேசிய மொழியில் திருவழிபாடு நடாத்த ஆரம்பித்தல்.
(5) துறவிகள் மறைத்தூதுப் பணியில் ஈடுபடல்.

47. அன்பு, பிரமாணிக்கம், ஒருவர் ஒருவர் மீதுள்ள மதிப்பு என்னும் வாக்குறுதிகளின் மூலம் திருமணமான தம்பதிகள் உட்படுவது,
(1) இறைச் செய்தியைப் பகிர்ந்தளிக்கும் பணி வாழ்விற்கு
(2) முறையான கல்வியைப் பெற்றுத் தூய வாழ்க்கை வாழ்வதற்கு
(3) ஒருவர் ஒருவருக்காகத் தம்மைத் தியாகம் செய்து பரித்தியாக வாழ்வு வாழ்வதற்கு
(4) மேன்மையான வாழ்வுக்கும், செபவாழ்வுக்கும்
(5) தலைமைத்துவத்தோடு கூடிய பரித்தியாக வாழ்விற்கு

48. மனிதன் இயற்கையாகவே சமூகத் தன்மையுடையவன் ஆகையால் ஒருவர் ஒருவருடைய நலன் கருதி செயற்பட வேண்டுமென விளங்கியிருப்பது,
(1) அவனியில் அமைதி என்னும் சுற்றுமடல்
(2) தொழிலாளர் சாசனம் என்னும் சுற்றுமடல்
(3) அன்னையும் ஆசிரியையும் என்னும் சுற்றுமடல்
(4) இயேசுவின் மறையுடல் என்னும் சுற்றுமடல்
(5) இறை பராமரிப்பு என்னும் சுற்றுமடல்

49. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பாகத் திருத்தந்தை 23ஆம் அருளப்பரால் வெளியிடப்பட்ட சுற்றுமடல்,
(1) போரும் அமைதியும் (2) அவனியில் அமைதி (3) மக்கள் முன்னேற்றம்
(4) சமூக ஒருமைப்பாடு (5) அமைதிக்கு வழி நீதி

50. இங்கிலாந்து – உரோமன் கத்தோலிக்க சர்வதேச ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது,
(1) 1948இல் (2) 1960இல் (3) 1967இல்
(4) 1970இல் (5) 1975இல்

(2 x 50 = 100)

மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

**Provincial Department of Education Northern Province**

**G.C.E.(A/L) Pilot Examination**

| | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்தவ சமயம் II**<br>**Christianity II** | **Three Hours**<br>**Gr -13 (2021)** | **43** | **T** | **II** |

*(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)*

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி – I

1. (i) பாலஸ்தீனாவின் அமைவிடம் தொடர்பாக இரண்டு விடயங்களை எழுதுக.

(ii) பாலஸ்தீனாவின் மேற்கு மலைப்பகுதி இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வோடு தொடர்புபட்டிருந்த விதம் தொடர்பாக இரு விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) நீதித்தலைவர்களின் ஆட்சிக்காலம் தொடர்பாக மூன்று விடயங்களை விபரிக்குக.

(iv) நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கினைக் விளக்குக. (2+4+6+8=20 புள்ளிகள்)

2. (i). இயேசுவின் காலத்தில் யூதர்கள் செலுத்திய வரிகள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii). யூத மக்கள் வரி தண்டுவோரை இனத்துரோகிகளாக கருதியமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(iii). யூத சமூகத் தலைவர்களாலும் சமயத் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படாத மூன்று குழுவினரைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv). இன்று பல்வேறு அடிமைத்தனங்களுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த உம்மால் ஆற்றக்கூடிய பணிகள் நான்கை விளக்குக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

3. (i). நற்கருணை தொடர்பான அந்தியோக்கியப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சங்கள் இரண்டு எழுதுக.

(ii). மிலான் சாசனத்தின் வழியாக ஏற்பட்ட நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(iii). கி. பி 325 – 451இற்கும் இடையில் நடைபெற்ற திருச்சங்கங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv). தற்காலத் திருச்சபையின் வளர்ச்சிக்கு உம்மால் வழங்கக்கூடிய பங்களிப்புக்கள் நான்கை விளக்குக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i). இறைவாக்கினரின் அழைப்பில் காணப்பட்ட பொதுப்பண்புகள் ஐந்தையும் எசாயா இறைவாக்கினரின் அழைப்புடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(ii). சமூக அநீதியான செயற்பாடுகள் அதிகரித்துச் செல்லும் இன்றைய எமது சமூகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இறைவாக்கினர் ஆமோஸின் போதனைகள் எவ்விதம் துணைபுரியும் என்பதனை ஐந்து எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

5. (i). புனித பவுலின் முதலாவது மறைத்தூதுப்பயணம் பற்றி ஐந்து விடயங்களை விளக்குக.

(ii). இன்றைய குடும்ப வாழ்வில் காணப்படும் சீர்கேடுகளைக் களைந்து சிறந்ததொரு குடும்ப வாழ்வைக் கட்டியெழுப்ப புனித பவுலின் போதனைகள் (எபே 5:22 – 6:4) எவ்விதம் உதவும் என்பதை ஐந்து எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

6. (i). இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெறும் நிகழ்வின் மூலம் நீர் விளங்கிக்கொள்ளும் விடயங்கள் ஐந்தினை விளக்குக.

(ii). திருமுழுக்கின் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள கடமைகள் பொறுப்புக்கள் பற்றி ஐந்து விடயங்களை விபரிக்குக.

(10+10=20 புள்ளிகள்)

7. (i). நவீன காலத்தில் திருச்சபை வளர்ச்சிக்காகவும் சமூக வளர்ச்சிக்காகவும் திருத்தந்தையர்கள் வழங்கிய பங்களிப்பை ஐந்து உதாரணங்கள் மூலம் விளக்குக.

(ii). இன்று திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் சமூக வளர்ச்சிக்காகவும் திருச்சபைத் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டிய பணிகள் ஐந்தினை விபரிக்குக.

(10+10=20 புள்ளிகள்)

8. (i). கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றி ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக.

(ii). கிறிஸ்தவர்களிடையே ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் ஐந்தினை விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)